# விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
# நெல் சந்தைப்படுத்தல் சபை

## பதவி வெற்றிடங்கள்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் காணி உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்கு உதவியாளர் – பதவி – 01**

(அ) வெளி/உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் கணக்கியல் பாடத்துடன் சம்பந்தப்பட்ட மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மற்றும் 05 ஆம் மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

(ஆ) **மாதாந்த சம்பள அளவு :**
MA 2-1-2025-ரூ.(50,540-10x540-7x630-4x890-20x1,190-87,710) (2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல 01/2025 இன் பிரகாரம்)

**முகாமைத்துவ உதவியாளர் – பதவிகள் – 10**

(அ) **வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல்**

**சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்:**

i. கல்விப்பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரணதரம்) பரீட்சையில்
   i. சிங்களம்/தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கிலமொழி
   என்ற பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்கள் (03) (சாதாரண பொது பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

(ஆ) **உள்ளக விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல்.**
ஆரம்ப தரம் - திறன் அல்லாத மற்றும் திறன்சேவை வகுதிகளில் கீழ்க்காணும் தகைமைகள் உள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.
கல்விப்பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரணதரம்) பரீட்சையில்
   i. சிங்களம்/தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கிலமொழி
   ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

- சேவையில் நிரந்தர நியமனத்தை பெற வேண்டியதுடன் அந்நியமனங்களில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- குறித்த தினத்திற்கு கிட்டிய நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் ஐந்து வருடம் (05) தொடர் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) **மாதாந்த சம்பள அளவு**
MA 1-1-2025-(ரூ.46,220-10x540-7x630-4x890-20x1,190-83,390) (2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல 01/2025 இன் பிரகாரம்)

**பொதுவான விடயங்கள்**

- வயதெல்லை 18 இற்கு குறையாது மற்றும் 45 வருடத்திற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.
- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே..... நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருப்பதுடன் சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- இப்பதவி நிரந்தரமானது ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு உரித்துரிமையுடையது.
- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு, பதவிக்கு விண்ணப்பிக்கும் முகமாக தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தற்போது அரச சேவையில், அரச வியாபார சேவையில், நியதிகள் சபை மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைமையூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சுயதரவு தகவல்கள் அடங்கிய தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை கல்வி மற்றும் தொழிற்தகைமைகளை உறுதி செய்யும் ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் தகவல்கள் உட்பட 2026.01.26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.
- விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- எழுத்துமூல போட்டிப்பரீட்சைக்கு மற்றும் கட்டமிடப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
- நியமனம் பற்றி வற்புறுத்தல்/பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் பொருத்தமற்றவராவதற்கு காரணமாகும்.
- நியமனம் பற்றிய இறுதித்தீர்மானம் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளருக்கு உரியது.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**வீடமைப்பு செயலகக் கட்டிடம், 6ஆம் மாடி,**
**சேர்.சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**